## தூய சக்தி மற்றும் வலைப்பின்னல் வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டம் - 2017

தூய சக்தி மற்றும் வலைப்பின்னல் வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை மின்சார சபைக்கும் (சீஈபிக்கும்) மற்றும் நிலைபேறான எரிசக்தி அதிகார சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடீபீ) இடையில் 2013 மே 08 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட எஸ்ஆர்ஜ 43576 ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் 2.09(அ)ii ஆம் உறுப்புரிமையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்ட அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்ட உடன்படிக்கைகளின் கீழ் கைச்சாத்திடப்பட்ட 2013 மே 08 ஆந் திகதிய 2892 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க மற்றும் 2893 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு நிறைவேற்று முகவராக உள்ளது. இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் பகுதி 01 முதல் 06 வரையான பகுதிகளை அமுலாக்குவதற்கு பொறுப்பாக உள்ள அதேவேளை நிலைபேறான எரிசக்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் பகுதி 07 இனை அமுல்படுத்துவதற்கு பொறுப்பாக உள்ளது. செயற்திட்டத்தின் பகுதி 01 தொடக்கம் பகுதி 06 வரை இலங்கை மின்சார சபையால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மீதான அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படுகின்றன. தூய மின்சக்தி வழங்கலை அதிகரித்தல் மற்றும் இலங்கையில் மின்சாரத்தை விநியோகிப்பதில் வினைத்திறனையும் நம்பகத்தன்மையினையும் முன்னேற்றுதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. செயற்திட்ட நிர்வாக கையேட்டின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 25,240 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொலர் 200 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 16,595.30 மில்லியனுக்குச் சமனான 66 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஐ.அ.டொலர் 131.50 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்குவதற்கு இணங்கப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 செப்தெம்பர் 30 இல் தொடங்கியிருந்ததுடன் 2017 யூன் 30 அளவில் பூர்த்தி செய்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கல் திகதி 2019 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட

நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட அத்தகைய செவ்வைகளையும் இப் பரிசோதனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட முன்னேற்ற நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் நன்கொடை வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் மற்றும் மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் செயற்திட்ட மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கு இணங்கியிருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) கடன் உடன்படிக்கைகளில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

இதுவரையிலான எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதிகள் ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக மீளளிப்புக்கான விண்ணப்பங்களிற்கு ஆதாரமாக அமைந்திருந்தன என நம்பகரமாக திருப்திப்பட முடியும் என்றும்,

(ஈ) முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் முன்வைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2007 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய எம்ஓஎவ்பி/ஈஆர்டீ/2007/02 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டிற்கு பின்னர் 03 மாதங்களிற்குள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2018 யூன் 19 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வலையமைப்பு எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற நோக்கங்களிற்கான மீண்டுவரும் செலவீனத்தை ஈடுசெய்வதற்கு இலங்கை மின்சார சபையிடமிருந்து பெறப்பட்ட பங்களிப்பில் மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தால் செலவழிக்கப்பட்ட ரூபா 66.30 மில்லியன் தொகை நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 123.71 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்டு இலங்கை மின்சார சபைக்கு தொடர்ந்து மாற்றப்பட்ட 09 மோட்டார் வாகனங்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் நடைமுறை வேலைகளின் கீழ் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12,858 மில்லியன் கூட்டுத்தொகையான கடன்களின் மொத்த மீளளிப்புக்கள் வெளிவாரி வளங்கள் திணைக்களத்தின் அறிக்கைகளில் காட்டப்பட்ட அத்திகதியிலுள்ளவாறு செயற்திட்டத்தின் நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 12,512 மில்லியன் தொகையான மீளளிப்புக்களின் நேரொத்த மீதிகளுடன் இணங்கியிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2017 திசெம்பர் 31 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு என்பற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| **மூலம்** | **கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை** | | **மீளாய்வாண்டிற் கான வருடாந்த பாதீட்டில் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு** | **பயன்படுத்திய நிதிகள்** | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | **மீளாய்வாண்டின் போது** | | **2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | |
| | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| **ஏடீபீ** | 131.50 | 16,595.30 | 6,033.00 | 36.56 | 5,544.00 | 82.52 | 12,512.00 |
| **ஜீஓஎஸ்எல்** | 68.50 | 8,644.70 | - | - | - | - | - |
| **சீசுபி** | - | - | 560.00 | 3.57 | 542.00 | 12.08 | 1,832.00 |
| **மொத்தம்** | **200.00** | **25,240.00** | **6,593.00** | **40.13** | **6,086.00** | **94.60** | **14,344.00** |

### 3.2 பௌதீக செயன்முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், அனுராதபுரத்திலிருந்து மன்னாரிற்கு புதிய இலத்திரனியல் பரிமாற்று இணைப்பினை நிர்மாணிப்பதன் பௌதீக வேலைகளின் 89 சதவீதம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடையப்பட்டிருந்தது. எனினும், மன்னாரிலுள்ள கிறிட் உபநிலையத்தின் நிர்மாண வேலைகள் நோக்கெல்லைகளிலுள்ள மாற்றங்களால் ஆரம்ப கட்டத்திலிருந்தது.

(ஆ) கேகாலை கிறீட் உபநிலையத்தின் நிர்மாண வேலைகள், துல்ஹிறியவிலுள்ள கிறீட் உபநிலையத்தின் பெருக்குதல் போன்றன அதன் மீதான இலத்திரனியல் பரிமாற்ற இணைப்புக்களை போடுதல் பூர்த்தியாக்கலின் காலதாமதங்களால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், காணி சுவீகரிப்பு மற்றும் செயன்முறை வசதிகளினாலான காலதாமதங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட பியஹம, சபுகஸ்கந்த மற்றும் கொலன்னாவவிலுள்ள கிறிட் உபநிலையங்களின் பிறேக்கர் சுவிட்சுக்கள் ஸ்தாபிப்பின் மீதான வேலைகள் 2017 திசெம்பர் 31 இலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. துல்கிறியவிலிருந்து கேகாலை வரைக்கும், அத்துகிறியிவிலிருந்து பாதுக்க வரைக்குமான பரிமாற்ற இணைப்புக்களின் நிர்மாணத்தின் பௌதீக செயன்முறை உரிய பிரதேச செயலகத்திடமிருந்து அனுமதியை பெறுவதிலுள்ள காலதாமதங்கள், மூல பாதைகளை மாற்றஞ் செய்தல் மற்றும் பொதுமக்களின் எதிர்ப்புக்கள் போன்றவற்றால் இலக்கிடப்பட்டதிலிருந்து விலகியிருந்தது.

(இ) பரிமாற்ற இணைப்புக்களை போடுவதற்காக அப் பிரதேசங்களில் வசிப்போருடன் தொடர்புகளை பேணுவதற்கு செயற்திட்டத்தால் முறையான கவனம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டதுடன், அதனால், பாதுக்கையூடாக பொல்பிற்றியவிலிருந்து பன்னிபிட்டிய வரைக்கும் பரிமாற்ற இணைப்புக்களை நிர்மாணிப்பதன் கீழான வேலைகள் இலக்குகளிற்கு அப்பாலிருந்தது. இந்த நோக்கங்களிற்காக பாதுக்கவிலுள்ள மஹன்னவிலுள் 13 இடங்களில் இந்த நோக்கங்களிற்கான காணியினை சுவீகரித்தலானது பொதுமக்கள் தடுப்பால் பூர்த்தியாக்கப்பட்டிருக்காத அதேநேரம் 04 ஏனைய நீதிமன்ற வழக்குகள் பரிமாற்ற இணைப்புக்களை நிர்மாணிப்பதற்கு எதிராக பாதிடப்பட்ட காணி உரிமையாளர்களால் தொடுக்கப்பட்டது.

### 3.2.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பட்டியலிடப்பட்டுள்ள நேரத்தினுள் கோரிக்கைகளின் மீளளிப்புக்களை உற்பத்தி செய்வதிலுள்ள காலதாமதங்களினால் மீளாய்வாண்டின் போது ரூபா 4.71 மில்லியன் கூட்டுத்தொகையான கடப்பாட்டு கட்டணங்கள் கடனளிக்கும் முகவரால் அறவிடப்பட்டிருந்தது.

### 3.2.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்திட்டத்தின் சிவில் நிர்மாண வேலைகளிலும் ஈடுபடுத்தப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் காஹரஹஸ்ரிஹிலின, கெவிதிஷோல, பொதுவில், அக்கரைப்பற்று மற்றும் கிரிபத்குமாறா பிரதேசங்களிலுள்ள 05 வீடுகளினை உரிய ஒப்பந்தக்காரர்களால் வேலைக்கமர்த்தப்பட்ட பதவியணியினர்களின் வதிவிட நோக்கங்களிற்காக வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தமை என அவதானிக்கப்பட்டது. எனினும், அப் பிரதேசத்தில் நிலவுகின்ற நடைமுறை சந்தை வீதங்களுடன் ஒப்பிடும் போது வீடொன்றிற்காக மாதமொன்றிற்கு ரூபா 350,000 வீதமானது அதன்மீது மிகையாகவிருந்ததுடன் ரூபா 12.95 மில்லியன் தொகையொன்று அதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் மீளளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்தின் பதவியணிக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு ஒப்பந்தக்காரர்களினூடாக செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட 11 மோட்டார் வாகனங்களின் நகர்வினை உறுதி செய்வதற்காக கணக்காய்விற்கான மாதாந்த ஓட்ட அட்டவணையை சமர்ப்பிப்பதற்கு செயற்திட்டத்தின் பயணத்தாள்கள் சான்றுறுதி செய்யப்பட்டது. அதன் விளைவால் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்ட ரூபா 27.23

மில்லியன் தொகையான எரிபொருள் மற்றும் பரிமாற்றல் கிரயம் கணக்காய்வில் திருப்திகரமாக உறுதி செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.3 நிதிக்கட்டுப்பாட்டு மீதான சர்ச்சைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் நடவடிக்கைகளானது 04 பகுதிகளும் செயற்திட்டத்தின் அத்தகைய பகுதிகளின் நடவடிக்கைகளின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பானதும் இலங்கை மின்சார சபையால் கையாளப்பட்ட அனைத்து நன்கொடையளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் மேற்பார்வைக்கு பொறுப்பாகவுள்ள மேலதிக பொது முகாமையாளருக்கு (செயற்திட்டங்கள்) பதிலாக இலங்கை மின்சார சபையின் பல்வேறுபட்ட பிரதேச தலைமைகளின் அதிகாரத்தின் கீழ் இருந்தது.

(ஆ) செயற்திட்ட உடன்படிக்கையின் 2.09(அ) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை மின்சார சபையால் எந்தவொரு தனியான பேரேட்டு கணக்குகளும் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.